DR copy

002598

சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – பதிவுத்துறை – திரு.லோ.சுதாகர் – கருணை அடிப்படையில் பணிநியமனம் – இளநிலை உதவியாளர் பதவியில் பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வணிகவரி மற்றும் பதிவுத் (எம்2) துறை

அரசாணை (3D) எண்.02

நாள் 10.01.2020
விகாரி, மார்கழி–25,
திருவள்ளுவர் ஆண்டு–2050.

படிக்கப்பட்டவை:

1. பதிவுத்துறைத் தலைவரின் நடவடிக்கைகள் எண்.54619/கே2/2016–2, நாள் 08.05.2018.
2. பதிவுத்துறைத் தலைவரின் கடிதம் எண்.58803/கே2/2016, நாள் 13.11.2019.
3. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.

******

ஆணை:-

பதிவுத்துறையில், கும்பகோணம் பதிவு மாவட்டத்தில் 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து வந்தபோது, பணிக்காலத்தினிடையே 16.12.2015 அன்று காலமான திரு.வ.லோகநாதன் என்பவரின் மனைவி திருமதி.லோ.ராணி, தமது மகன் திரு.லோ.சுதாகர் என்பவருக்குக் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்குமாறு 20.04.2016–ல் மனு அளித்தார். நடைமுறையிலிருந்த அரசாணைகளின்படி அன்னாரது கோரிக்கையினைப் பரிசீலனை செய்த பதிவுத்துறைத்தலைவர், திரு.லோ.சுதாகர் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்படுவதற்குரிய கல்வி மற்றும் வயதுத் தகுதிகளைப் பெற்றிருந்தபடியால், அவருக்குக் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட நடவடிக்கைகளில் பணிநியமனம் செய்து ஆணை வழங்கியுள்ளார். அதன்படி, திரு.லோ.சுதாகர் 15.05.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். திரு.லோ.சுதாகர், இளநிலை உதவியாளரின் தற்காலிகப் பணியினை வரன்முறைப் படுத்துவதற்கு பதிவுத்துறைத் தலைவர் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்குச் செயற்குறிப்பினை அனுப்பியுள்ளார்.

..2

2. பார்வை மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படும் பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

3. இந்நிலையில், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பதிவுத்துறையில், தஞ்சாவூர் பதிவு மாவட்டத்தில், கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டுள்ள திரு.லோ.சுதாகர் என்பவருக்கு 15.05.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதியினைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணி வரன்முறைப்படுத்துவதால், தனியர், ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைகள் ஏதுமிருப்பின், நடைமுறையிலுள்ள விதிகளின்படி, அவற்றைப் பெற்றிடத் தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அலுவல் சார்பற்ற எண்.24936/ட்டி.1/2019–1, நாள் 23.12.2019 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறையின் அலுவல் சார்பற்ற எண். 43240/ஜி2/2019–1, நாள் 07.01.2020–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கா.பாலச்சந்திரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
✓திரு.லோ.சுதாகர், இளநிலை உதவியாளர்,
தஞ்சாவூர் பதிவு மாவட்டம். (பதிவுத்துறைத் தலைவர் மூலமாக)
பதிவுத்துறைத் தலைவர், சென்னை–28 (இணைப்புகளுடன்)

<u>நகல்:</u>
தொழிலாளர் (ம) வேலைவாய்ப்பு(ட்டி1)த்துறை, சென்னை–9.
பணியாளர் (ம) நிர்வாக சீர்திருத்த(ஜி2)த்துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

10/1/2020
பிரிவு அலுவலர்.
10/1/2020

தஞ்சாவூர் மாவட்டப்பதிவாளர் (நிருவாகம்) (உ.ப.து.த நிலை) அவர்களின் நடவடிக்கைகள்,

பிறப்பிப்பவர்- திரு.க.அசோகன் எம்.காம்.,

## செ.மு.எண்.3719/அ1/2021 நாள்.14.12.2021.

பொருள்: பயிற்சி - அரசுஅலுவலர் பயிற்சி நிலையம், பவானி சாகர் - தஞ்சாவூர் பெரியார் மணியம்மை பொறியியல் கல்லூரியில் 17.12.2021 முதல் 04.02.2022 வரை உதவியாளர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்களுக்கான 37 பணி நாட்கள் கொண்ட சுருக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சியில் கலந்து கொள்ளுதல் - தொடர்பாக.

பார்வை:
1. பதிவுத்துறைத்தலைவர், சென்னை எண்.49122/கே2/2021 நாள்.13.12.2021.
2. முதல்வர் அரசு அலுவலர் பயிற்சி நிலையம் பவானிசாகர் ந.க.எண்.அ5/4893/2021 நாள்.08.12.2021 மற்றும் 09.12.2021.

*****

ஆணை:-

பார்வை(1)-இல் காணும் பதிவுத்துறைத்தலைவர் கடிதப்படி தஞ்சாவூர் பெரியார் மணியம்மை பொறியியல் கல்லூரியில் 17.12.2021 முதல் 04.02.2022 வரை 37 பணி நாட்கள் கொண்ட சுருக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சியில் கீழ்க்கண்ட பணியாளர்கள் கலந்து கொள்ளும்படி அறிவுறுத்தப்படுகிறது.

| வ.எண் | பெயர் | பதவி | பணிபுரியும் அலுவலகம் | பகராண்மையில் பணிபுரியும் அலுவலகம் |
|---|---|---|---|---|
| 1. | திருமதி.த.ரோஸி | உதவியாளர் | மாவட்டப்பதிவாளர் (நிருவாகம்) அலுவலகம் | துணைப்பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம் தஞ்சாவூர் |
| 2. | திரு.ம.பழனிச்சாமி | உதவியாளர் | மாவட்டப்பதிவாளர் (நிருவாகம்) அலுவலகம் | துணைப்பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம் தஞ்சாவூர் |
| 3. | திரு.க.அதீஸ்வரன் | இளநிலை உதவியாளர் | சார்பதிவாளர் அலுவலகம் திருக்காட்டுப்பள்ளி | துணைப்பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம் தஞ்சாவூர் |
| 4. | திரு.லோ.சுதாகர் | இளநிலை உதவியாளர் | அசல் பத்திரப்பிரிவு மாவட்டப்பதிவாளர் (நிருவாகம்) அலுவலகம் | - |
| 5. | திரு.மு.பிரகாஷ் | இளநிலை உதவியாளர் | சார்பதிவாளர் அலுவலகம் திருவையாறு | மாவட்டப்பதிவாளர் (தணிக்கை) அலுவலகம் தஞ்சாவூர் |
| 6. | திருமதி.ப.கவிதா | இளநிலை உதவியாளர் | சார்பதிவாளர் அலுவலகம் கருந்தட்டான்குடி | துணைப்பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம் தஞ்சாவூர் |
| 7. | திரு.சு.சுரேஷ்பாபு | இளநிலை உதவியாளர் | சார்பதிவாளர் அலுவலகம் வல்லம் | சார்பதிவாளர் அலுவலகம், திருக்காட்டுப்பள்ளி |

| | | | | |
|---|---|---|---|---|
| 8. | திருமதி.க.செல்வம் | இளநிலை உதவியாளர் | சார்பதிவாளர் அலுவலகம், கருந்தட்டான்குடி | - |
| 9. | செல்வி.தாரா | இளநிலை உதவியாளர் | சார்பதிவாளர் அலுவலகம், திருவையாறு | - |

மேற்குறிப்பிட்ட நபர்கள் 16.12.2021 முற்பகல் 10.00 மணிக்குள் தஞ்சாவூர் பெரியார் மணியம்மை பொறியியல் கல்லூரியில் சிறப்பு பயிற்சி மையத்தை சென்றடையும் வண்ணம் பணியிலிருந்து விடுவிக்குமாறும் இணைப்பில் கண்ட நடைமுறைகளை வழுவாது பின்பற்ற பயிற்சியாளர்களுக்கு அறிவுறுத்தவும் சம்பந்தப்பட்ட சார்பதிவாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் இத்துடன் பார்வையில் காணும் கடிதநகல் அனுப்பிவைக்கப்படுகிறது. அக்கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு செயல்பட பயிற்சியாளர்களுக்கு அறிவுறுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மாவட்டப்பதிவாளர் (நிருவாகம்)
(உபதுத நிலை),
தஞ்சாவூர்

14.12.21 14.12.21

இணைப்பு

பார்வை(2)-இல் காணும் கடித நகல்.

பெறுநர்

1. சம்பந்தப்பட்ட உதவியாளர் மற்றும் இளநிலை உதவியாளர்கள்.
   சம்பந்தப்பட்ட சார்பதிவாளர் மூலம்.
2. பதிவுத்துறைத்தலைவர், சென்னை.(தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது)
3. துணைப்பதிவுத்துணைத்தலைவர், தஞ்சாவூர்(தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது)
4. முதலவர், அரசு அலுவலர் பயிற்சி நிலையம்,
   பவானி சாகர்,
   ஈரோடு மாவட்டம் 638 451.